# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தோழர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தீ.கலைச்செல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடக செய்தி 16/ 2018 — நாள் : 23.12.2018

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு,சுப்பிரமணியன். பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் பத்திரிகை செய்தி :

ஊடக செய்தி

**பொங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி**
**28.12.2018 அன்று தமிழகம் முழுவதும் 1000 இடங்களில்**
**கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்**

தமிழ அரசு ஊழியர்களின் ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவினர் 30 ஆண்டு காலமாக பெற்று வந்த சிறப்பு மிகை ஊதியம் என்ற பொங்கல் கருணைத் தொகை கடந்த ஆண்டு தமிழக அரசு இரத்து செய்து உத்திரவிட்டது. ஏற்கனவே 21 மாத ஊதிய நிலுவை, ஓய்வூதியம் போன்ற உரிமைகளை இழந்திருக்கும் அரசு ஊழியர்களுக்கு அரசின் இத்தகைய செயல்பாடு மேலும் வேதனையை உருவாக்கியுள்ளது.

தமிழகத்தை ஆட்சி செய்த முன்னாள் முதல்வர்கள் தமிழர்களின் முக்கிய பண்டிகையான தை பொங்கல் திருநாளை அரசு ஊழியர்கள் உற்சாகத்தோடு கொண்டாடும் பொருட்டு தொடர்ச்சியாக வழங்கி வந்த கருணைத் தொகையை ‘ஏ’ மற்றும் ‘பி’ பிரிவு ஊழியர்களுக்கு தற்போதைய அரசு மறுத்திருப்பது மிகப்பெரிய அநீதியும், அரசின் எதேச்சதிகார செயலுமாகும். மேலும் தொடர்ந்து பல ஆண்டுகளாக சி மற்றும் டி பிரிவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மிகை

ஊதியம் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையாக வழங்கப்படும் என்று அறிவித்துவிட்டு ரூ.3000/- உச்சரவம்பு என நிர்ணயித்திருப்பதும் ஏற்புடையதல்ல.

மத்திய அரசு ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் ரூ.7000/- போனசாக அறிவிக்கப்பட்டு உச்சவரம்புத் தொகையும் ரூ.7000/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ள நிலையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக எல்லா சலுகைகளையும் மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குகிறோம் என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழக அரசு இதுபோன்று மாநில அரசு ஊழியர்களின் உரிமையை பறிப்பது வேதனைக்குரியது.

கடந்த ஆண்டு இக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக முதல்வருக்கு எங்கள் சங்கத்தால் முறையீடு செய்தபோதிலும் அரசிடமிருந்து எவ்வித அசைவும் இது நாள் வரை இல்லை. இது அரசு ஊழியர்கள் மத்தியில் மிகுந்த ஏமாற்றத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று 23.12.2018 சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் கீழ்க்காணும் கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசை வலியுறுத்தி 28.12.2018 அன்று தமிழகம் முழுவதும் 1000 இடங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என்று முடிவாற்றப்பட்டது.

கோரிக்கைகள்

1. தமிழக அரசில் பணிபுரியும் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஊழியர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டுக்கு சிறப்பு மிகை ஊதியமாக(பொங்கல் கருணைத்தொகை) ரூ,3000/- வழங்கிட வேண்டும்.
2. தமிழக அரசில் பணி புரியும் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டுக்கு மிகை ஊதியமாக ஒரு மாத கால ஊதியத்தை உச்சவரம்பின்றி வழங்கிட வேண்டும்.

மு.அன்பரசு
பொதுச்செயலாளர்

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்